**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.**60 /2024

**Prosecution Witness** : 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ஜெயராணி | **Caste** | : | |
| **Husband's Name** | : | திரு.மதியழகன் | **Calling** | : | |
| **Village** | : | கொட்டார பட்டி | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 45 |
| | | | **Dated** | : | 14.08.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 4 திருமதி. ஜெயராணி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்து போனவரை தெரியும். கடந்த 06.08.2023ம் தேதியில் காலை 10.30 மணி இருக்கும். நான் அப்போது சரவணன் வீட்டிற்கு கிழக்கில் உள்ள எனது வீட்டில் இருந்து சரவணனை பார்க்க சென்றேன். நான் போய் சிறிது நேரத்தில் புகழ்நாதன் சரவணன் தனது இருசக்கர வாகனத்தில் கொண்டு வந்து இறக்கி விட்டார்.

அப்போது ஆஜர் எதிரி, சரவணனை பார்த்து ஏண்டா தேவிடியா பயலே எனது அம்மாவை அடித்தவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று இறக்கி விடுவாயா என கேட்டு அடித்து கீழே தள்ளி விட்டு புகழ்நாதனை ஆஜர் எதிரி தனது கையால் அவரது தலையிலும், நெஞ்சிலும் அடித்தார். அவர்கள் சண்டையில் செல்வக்குமார் விலக்கிவிட்டு புகழ்நாதனை கிழக்கே கூட்டிக்கொண்டு சென்றார். அப்போது புகழ் தனது மனைவி கீதாவிடம் எனக்கு முடியவில்லை என்று சொன்னார். அதனால் அவரை செல்வக்குமாரும், செந்திலும் காரை எடுத்துக் கொண்டு வந்து ரெட்டியார் சத்திரம் தனியார் மருத்துவமனைக்கு சென்றார்கள். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு பல்ஸ் குறைவாக இருந்ததால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்க சொன்னார்கள். அங்கு அவரை பரிசோதித்துவிட்டு அவர் இறந்து விட்டதாக அவரை பரிசோதித்த மருத்துவர்கள் கூறினார்கள். அன்றைய தினமே அன்று மாலை இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

சாட்சி சரவணன் வீடும், எதிரியின் பாட்டி வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பாட்டி வீடு மெயின் ரோட்டை பார்த்து தலை வாசல் உள்ளது. அதனை ஒட்டினார் போல மண் ரோடு உள்ளது. அங்கு இடிந்துபோன தங்கம் என்பவரின் வீடு உள்ளது. எதிரியின் அப்பத்தா வீட்டு வாசலில் மெயின் ரோட்டை ஒட்டி சம்பவம் நடந்தது. நான் சரவணனை பார்க்கபோன போது சரவணனின் அத்தை ராஜம்மாள், பெரிய பழனியம்மாள், சின்ன பழனியம்மாள், ராணி ஆகியோர் வந்தார்களா என்றால் வந்து விட்டு சம்பவத்திற்கு முன்பே சென்று விட்டார்கள். அசா.2 சரவணன் வீட்டில் அவரது அப்பா, அம்மா ஆகியோர் இருந்தார்கள். அங்கு

இருந்த சந்திற்குள் சக்திவேல், ராஜாத்தி, முத்தையா, தண்டபாணி ஆகியோர் வீடுகளில் ஆட்கள் இருந்தார்கள். ராஜாவின் பாட்டி வீட்டிற்கு மேற்கு தெருவில் 4 வீடு தள்ளி பெட்டிக்கடை இருக்கிறது என்றால் சரிதான். சம்பவ இடத்தின் நிலத்தில் இரத்த கறை இருந்தது என்றால் இல்லை. சரவணன் வீட்டு வாசலில் இல்லை. சரவணன் வீட்டு வாசல் மெயின் ரோட்டில் இருந்து 15 அடி தூரத்தில் சந்திற்குள் உள்ளது. என்னுடைய வீடு கிழக்கு தெருவின் பின் பக்கம் தெற்கு பகுதியில் உள்ளது. போலீஸ் விசாரணையில் நான் சரவணனை பார்க்க சென்றேன், போய் சிறிது நேரத்தில் புகழ்நாதன் சரவணணை தனது இரு சக்கர வாகனத்தில் கொண்டு வந்து இறக்கி விட்டார், அப்போது புகழ்நாதனை எதிரி ராஜா கையால் அடித்து கீழே தள்ளி விட்டார் என்று சொல்லி இருக்கிறேனா என்றால் தள்ளிவிட்டு பின்னர் புகழ்நாதனை அடித்ததாக சொல்லி இருக்கிறேன். தள்ளிவிட்டு அடிப்பதற்கும், அடித்துவிட்டு தள்ளி விடுவதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். எதிரி ராஜா, புகழ்நாதனை தள்ளிவிட்டு தலையிலும், நெஞ்சிலும் அடித்ததாக தான் போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். என் வீட்டில் இருந்து சரவணன் வீடு தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் சரவணனை விசாரிக்க அவரது வீட்டிற்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலீசார் என்னை விசாரிக்கும் போது புகழ்நாதன் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு போன் என சொல்லி இருக்கிறேன் என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தில் சத்தம் கேட்டு தான் நான் சம்பவ இடத்திற்கு போனேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில், சம்பவம் நடந்த அன்று மதியம் 12.30 மணி அளவில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். என் பெயர், கணவர் பெயர், வீட்டு முகவரி ஆகியவற்றை கேட்டார்கள். நான் என்ன பார்த்தேன், சம்பவம் எப்படி நடந்தது என்று கேட்டார்கள். அதன் பிறகு என்னிடம் அதில்

கையொப்பம் வாங்கி கொண்டார்கள். அசா.1ன் நெருங்கிய உறவினர் என்பதால் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி ராஜாவும், அவரது மனைவி சரண்யாவும் விடுமுறைக்கு கொட்டார பட்டி ஊருக்கு வந்து, சரண்யாவின் சகோதரர் புகழ்நாதனின் வீட்டிற்கு செல்லவில்லை. அதனால் புகழ்நாதனுக்கு தனது தங்கை தனது வீட்டிற்கு வரவில்லை என வருத்தம் இருந்தது. புகழ்நாதன் ராஜா வீட்டு வாசலில் சென்று கெட்ட வார்த்தைகளால் அவரை திட்டி, ஏன் தனது சகோதரியான, ராஜாவின் மனைவியான சரண்யாவை ஏன் ராஜா தங்கள் வீட்டிற்கு அனுப்பவில்லை என்று கேள்வி கேட்டு சண்டை போட்டார் என்றால் இல்லை. புகழ்நாதன் எதிரி ராஜாவை தனது நகத்தை வைத்து ராஜாவின் இரண்டு தோள்பட்டைகளிலும், வலது காதின் பின்புறமும், இடது மூக்கின் கீழ் பகுதியிலும் பிராண்டி வைத்து அடித்தார் என்றும், அப்போது புகழ்நாதன் அவரே நிலை தடுமாறி கீழே விழுந்து அவருக்கு தலையில் உள்புற காயங்களும், முழங்காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.08.14 19:09:40 +0530